# இந்திய நூலக வரலாறு

THE THANJAVUR MAHARAJA SERFOJI'S SARASWATHI MAHAL LIBRARY
12 JAN 1981

மக்களுக்கு நிறைந்த சேவையில் சிறந்தபடைப்பு • நூலகப்பணி •



வே.தில்லைநாயகம் MA, MLS, BT

# இந்திய நூலக வரலாறு

தமிழ்நாடு பொது நூலகத்துறை இயக்குனர்

**வே. தில்லைநாயகம்**

**MA. MLS, BT**

வெளியீடு :

**தமிழ்நாடு பொது நூலகத்துறை**

**சென்னை-8**

# 1 நூல்

## 11 நூல் என்றால் என்ன?

நுவலப்பட்டது நூல் என்று பெயர் பெற்றது. நூலக இயல் கருத்துப்படி, நூல் என்பது

1 ஒரு கருவி; ஒருவர் கருத்தை அடுத்தவருக்கு எடுத் துரைக்க உதவும்;

2 ஒரு குறிப்பிட்ட உருவில் அடங்கி இருக்கும்;

3 ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு எளிதில் எடுத்துச் செல்ல ஏற்றதாய் இருக்கும்;

4 பயன்படுத்துவார் கையாள வசதியாய் இருக்கும்;

5 (அ) கல்வி அறிவு தந்து, (ஆ) நடைமுறை நிலை தெரி வித்து, (இ) கடமைகளைச் சுட்டிக் காட்டி, உரிமை களைப் பாதுகாத்து (ஈ) பொருளாதார வளர்ச்சிக்கு உதவி செய்து, (உ) கலாசாரத்தைக் காக்கும் முதலிய ஐந்து செயல் பண்பு (Functions) களைக் கொண் டிருக்கும்.

## 12 வேறு பெயர்கள்

ஆதி நாளில் இருந்து தமிழன் ஒவ்வொரு பொருளுக்கும், அதன் பண்பு, நலன், பயன்படு விதம், உரு அமைவு, நிறச் சாயல் முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டு பெயர் வைத்திருக் கிறான். நூல் இம்முறையில் ஏடு, ஓலை, சுவடி, தூக்கு, பனுவல், புத்தகம் என்று பெயர் பெற்றிருக்கிறது.

## 13 எழுதப்படும் பொருள்

மனிதனை ஓர் உருவாக்கிக் காட்டுவது எலும்புக் கூடு. அது போலவே நூலுக்கு எலும்பு போன்றது அது எழுதப் பயன்படும் பொருள்கள் (Writing materials) ஆகும்.

இதற்கு இலை, பட்டை, பலகை, தோல், துணி, உலோகங்கள், கல், ஆமை ஓடு, சங்கு, சிப்பி, பிராணிகளின் எலும்பு, காகிதம் முதலியன பயன் பட்டுள்ளன.

## 14 எழுதும் பொருள்

இலையில் தொடங்கிக் காகிதம் வரை எழுதப்படும் பொருள் களிலே, தன் கருத்தைப் பதிக்க எழுதும் பொருள்—எழுத்தாணி—பேனா—தேவைப்பட்டன. எழுத்தாணி கண்டான் தமிழன். ஊணோடு கூறை எழுத்தாணி (ஏலாதி, 63) என்ற வரி எழுத் தாணியின் பழமை பேசுகிறது. நாணல் தண்டு, பறவை இறகு எலும்பு முதலியன தேவைக்கு ஏற்பச் சீவியமைக்கப்பட்டுப் பயன் படுத்தப் பட்டுள்ளன.

## 15 மை

எழுதப்படும் பொருளின்மேல் எழுதும் பொருளால் எழுத மசி என்றும் மை என்றும் கூறப்படும் திரவப் பொருள் கறுப்பு வண்ணத்திலும், பிற பல்வேறு வண்ணங்களிலும் தயாரிக்கப் பட்டுள்ளது. இதை வைத்திருந்த மைக்கூடுகள் மொகஞ் சதாரோ, நாலந்தா, தட்சசீலம் முதலிய இடங்களில் நடந்த ஆய்வுகளில் கிடைத்துள்ளன.

## 16 நுண் உடல்

நூலின் அடிப்படையான எழுதப்படும் பொருளோடு, எழுது பொருளோடு நூல் பெருமை நின்று விடுவதில்லை.

ஒரு நூலின் பெருமை, அது கொண்டுள்ள மொழி (Language), நடை (Style), தரம் (Standard), ஓவியம் (Illustration), தேசப் படம், (Atlas), கலைச் சொல் (Technicalterm), நூல் தொகை (Bibliography), சொல் அடைவு (Index) முதலியன கொண்டு நிர்ணயிக்கப்படும்.

## 17 தரம்

நூலில் பல தரங்கள் (Standards) உண்டு. இவற்றைப் பொதுவாக ஐவகையாகக் கொள்ளலாம். அவையாவன;

1 கருமூலம் கொண்டவை (Seminal materials),

2 ஆய்வுப் பொருள் கொண்டவை (Research materials),

3 விளக்கம் தருபவை (Expositary materials),

4 தொடக்க நிலையின (Elementary materials),

5 அறிக்கை நிலையின (Reporting materials).

இப்படி வரும் நூல்கள் ஒவ்வொன்றையும் பயன்படுத்துவார் பரிசீலிக்க வேண்டும். தங்களுக்கு வேண்டியவற்றை வேண்டிய முறையில் விவேகமாகப் பயன்படுத்திக் கொள்ளப் பழக வேண்டும்.

## 18 உயிர்

ஒவ்வொரு நூலும் ஒன்று அல்லது பல கருத்துகளைக் கொண்டுதான் உருவாக்கப்படுகிறது. இக் கருத்துதான் நூலின் உயிராகும். இக்கருத்து அடிப்படையில் நூல்களை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். அவை யாவன :

1 தகவல் தருபவை (Infarmative materials),

2 புத்துயிர் தருபவை (Recreative materials),

3 உயிர்ப்புத் தருபவை (Inspirative materials),

ஆனால், ஒவ்வொரு நூலும் ஒன்றை மட்டும் கொண்டு இருப்பது இல்லை. ஏனெனில், இவை ஒன்றுக்கு ஒன்று தொடர்பு உள்ளவை; இணைபவை; பிணைபவை. எனவே, ஒவ்வொரு நூலையும் ஆய்ந்து, உயர்ந்து நிற்கும் கருத்தினைக் கொண்டு வகை காண வேண்டும்.

## 19 வளர்ச்சி

இன்று ஆயிரக்கணக்கான நூல்கள் உலகின் பல்வேறு பகுதிகளில் பல்வேறு மொழிகளில், பல்வேறு தரங்களில் வெளிவந்து கொண்டிருக்கின்றன. யுனெசுகோ 1977 புள்ளி விவர ஆண்டேடு தரும் கணக்குப்படி 1976-ல் மட்டும் உலகம் முழுமையும் ஐந்து இலட்சத்து தொண்ணூற்று ஓராயிரம் நூல்கள் வெளியாகியுள்ளன அவற்றில் பெரும்பகுதி நூலகங்களுக்குச் செல்கின்றன. எனவே நூலகங்களில் அவை எப்படிப் பயன்படுகின்றன என அறிய நூலகம் என்றால் என்ன என்று பார்ப்போம்.

# 2 நூலகம்

## 21 என்ன?

அகம் என்பது இடம் என்று பொருள்படும். இதையே இல்லம், இருப்பிடம், உறையுள், வீடு என்றும் குறிப்பிடுவது உண்டு. இத்தகு இடம் நூலைத் தன்னிடத்தே கொண்டபோது நூல்-அகம்–நூலகம் என்று பெயர் பெற்றது. இது ஆங்கிலத்தில் Library என்று குறிக்கப்படுகிறது. இதையே பண்டாரம், சரசுவதி பண்டாரம், புத்தக பண்டாரம், ஏடகம், சுவடிச் சாலை, சுவடியகம், புத்தகச் சாலை, நூல் நிலையம் என்றும் கூறுவதுண்டு.

## 22 ஏன்?

### 221 சிந்திக்கிறான்

ஒவ்வொரு நூலும் உருவாகக் காலம் பிடிக்கிறது. சிந்தனையாளன் சிந்தித்துச் சிந்தித்துக் கருத்தை உருவாக்குகிறான். உருவாக்கியதை நூலாக வடிக்கத் துடிக்கிறான்.

### 222 பதிக்கிறான்

இதைக் காலத்திற்கேற்ப கிடைக்கும் எழுதுபொருளில்— களிமண் கட்டி, செங்கல், மரப்பட்டை, பலகை, உலோகத் தகடு, காகிதம் முதலிய பொருள்களில் — பதித்து வைக்கிறான்.

### 223 சேர்க்கிறான்

இதைப் பிறரும் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்று நினைக்கிறான் மனிதன்; பாதுகாத்து வைக்கிறான். இது ஒன்று, நூறு, ஆயிரம் என்றிருக்கும்போது தனி மனிதனால் முடிகிறது. இதிலும் அவனுக்குத் தேவையானதை மட்டும் சேர்க்கிறான்.

### 224 அமைக்கிறான்

இந்த நிலை மாறுகிறது. பலவற்றைப் பலருக்கும் பயன்படுமாறு பாதுகாக்க வேண்டும் என்ற நிலை பிறக்கிறது. இதற்கு

ஒரு அமைப்புத் தேவைப்படுகிறது. இந்த அமைப்பே நூலகம் என்று பெயர் பெறுகிறது.

## 23 எப்படி?

பரிணாம வளர்ச்சி—நிகழ்வாக்கம் (Evolution)—போலவே நூலகமும் மெல்ல மெல்ல, காலப்போக்கில் வளர்ந்து, முன்னேறிக் கொண்டிருக்கிறது. இது எப்படி?

## 24 சேர்த்து வைக்குமிடம்

பாதுகாக்கப்பட வேண்டிய நூல்கள் பத்திரமாய் இருக்கக் கோயில்களில் — மடங்களில் — பணக்காரர் மாளிகைகளில்— சேர்த்து வைக்கப்பட்டன.

## 25 படி எடுக்குமிடம்

அடுத்து நூலகம் ஒரு நூலைப் பார்த்து, மற்றொரு படி எழுதுமிடமாய் இருந்திருக்கிறது. சிதம்பரம் கோயிலில் இருந்த நூலகம் இந்த வேலையில் ஈடுபட்டிருந்தது என்கிறது கல்வெட்டுக் குறிப்பு ஒன்று.

## 26 கேட்டால் கொடுக்குமிடம்

காலப் போக்கில் அறிவு பரவியது. காகிதம் கண்டுபிடிக்கப் பட்டது. அச்சுக் கலை முன்னேறியது. நூல்கள் வெளியீடு பெருகியது. சேர்த்து வைக்குமிடம் என்றிருந்த நிலைமை மாறியது. நூலகம் கேட்டால் கொடுத்து வாங்குமிடம் என்ற நிலை பிறந்தது.

## 27 பணி நிலையம்

இன்றைய நூலகம் காலத்திற்கு ஏற்ப மாறி வருகிறது. இன்று அறிவுக் கூடமாய், ஆய்வு நிலையமாய், சமுதாய மைய மாய் மாறும் போக்கில் நூல் உதவும் பணி நிலையமாய் மாறி வருகிறது.

## 28 இன்றைய நோக்கம்

நூலகம் என்பது கல்வி, உலக நடப்பு, அரசியல், பொருளாதாரம், கலாச்சாரம் முதலிய ஐந்து துறைகளில் பாடுபட்டு வருகிறது.

## 29 இலக்கணம்

நூலகம் உலக அறிவு முழுமையும் காட்டும் வகையில் நூல்களைச் சேகரிக்க வேண்டும்; சேகரித்தவற்றைப் பகுக்க வேண்டும்; பட்டியிட வேண்டும்; அடுக்கவேண்டும்; அனைவரும் அறியச் செய்ய வேண்டும். இதற்கு வாசகரோடு தொடர்பு கொண்டு விரையாது, வெகுளாது, விரும்பி, முகம் மலர்ந்து, கொள்வோன் கொள்வகையறிந்து, அவர் உளங்கொள, கோட்டமில் மனத்தோடு நூலும் - நூல் கருத்தும் - கொடுத்துதவ வேண்டும்.

# 3 நூலக இயக்கம்

## 31 அறிக்கைகள்

இன்று உலக நாடுகள் ஒவ்வொன்றும், நூலகப் பணிக்காக-தங்கள் முயற்சிகளைத் தீவிரப்படுத்தியுள்ளன. இம்முயற்சியின் போக்கை ஆண்டறிக்கைகளாக வெளியிடுகின்றன.

இத்தகு அறிக்கைகளை எல்லாம் தொகுத்து, ஒரு பெரிய நூலாக—யுனெசுகோ புள்ளி விவர ஆண்டேடு (Unesco Statistical Year Book) என்ற தலைப்பில்—ஆண்டுதோறும் யுனெசுகோ அமைவனம் வெளியிட்டு வருகிறது.

## 32 புரிவது என்ன?

இந்தப் புள்ளி விவரங்களைச் சற்று ஊன்றிப் பார்த்தால் சில நாடுகள்- ஐக்கிய அமெரிக்க நாடுகள், உருசியா, செர்மனி, பிரிட்டன், ஃபிரான்சு, சப்பான் முதலிய நாடுகள்-முன்னேறியிருப்பதையும், சில நாடுகள்—ஆப்பிரிக்க நாடுகள், ஆசிய நாடுகள், தென் அமெரிக்க நாடுகள்-பின் நிலையில் இருப்பதையும் காணலாம். இது ஏன்?

## 33 சமூகம்

சமூகம் பண்பு உடையதாக, நாகரிகம் உடையதாக, முன்னேறும் கருத்துக் கொண்டதாக, கல்வித் தேவையை உணர்ந்ததாக, பொருளாதார முன்னேற்றம் உள்ளதாக இருக்கும் நாடுகள் முன்னேறி வருகின்றன. இந்த நிலையில்லாத நாடுகள் பின் தங்கி நிற்கின்றன. இந்த நிலையை மாற்றுவது எப்படி?

## 34 முயற்சிகள்

நூலக முயற்சி விரைந்து செயல்பட வேண்டும். இது தனி முயற்சியில், சமூக முயற்சியில், அரசு முயற்சியில், சட்ட முயற்சியில் நடக்க வேண்டும். இதில் சட்ட முயற்சிதான் சிறப்பானதாகும். அது எப்படி அமைய வேண்டும்?

## 35 சட்ட முயற்சி

நூலகச் சட்டம் பொதுவாக எளிதாக, காலத்திற்கேற்ப முன்னேறும் வகையில் அரசியல் மாற்றத்திற்கு ஆளாகிவிடாத

நிலையில் அமையவேண்டும். நாட்டிலுள்ள எல்லா நூலக முறைமைகளையும் ஒருங்கிணைத்துத் தேசிய, மாநில, மாவட்ட, தல நூலகப் பணி செய்முறைகளைத் திட்டவட்டமாகச் செயல் படுத்த வேண்டும்.

கல்விச் செலவில் பத்தில் ஒரு பகுதியைக் கட்டாய நூலகப் பணிக்காக ஒதுக்க வேண்டும்.

### 36 அரசு

அரசின் கடமையானது சட்டம், பணம், ஒருங்கிணைப்பு என்ற மூன்று நிலையில் நடந்தேறவேண்டும். இதில் சட்டம் பணத்தையும் ஒருங்கிணைப்பையும் ஓர்மைப்படுத்தும். பணம் கொடுப்பது அரசின் கடமையாகும்; இது தேவையறிந்து கொடுக்கப்படவேண்டும். ஒருங்கிணைப்பு பணச் செலவைக் குறைக்கும்; சட்டம் சரிவர வேலை செய்ய உதவும். இது பிறரைச் செயற்படத் தூண்டும்.

### 37 நூலகத்தர்

அரசே ஒவ்வொரு கடமையையும் கண்காணித்துக் கொண் டிருக்க முடியாது; கூடாது. எனவே அரசின் சார்பில் பொறுப் பேற்கும் நூலகத்தர் (Library Authorities)— நூலக நிருவாகத் தொடர்பு கொண்டவர்கள்—நூலக முன்னேற்றத்தில் கருத்துக் கொண்டவராய், நூலகப் பணியாளர்களை ஊக்குபவராய்ச் செயற்பட வேண்டும்.

### 38 நூலகர்

நூலகப் பணியின் முன்னேற்றம் நூலகர்கள் முயற்சியில் தானுள்ளது. எனவே நூலகப் பணியாளர்கள் நூல்களைப் படித்துணர்ந்து நூற்றொகை ஆற்றல் பெற்று, நூல்களைப் பகுத்துப் பட்டியிட்டு, நூல்களைக் கட்டுக்கட்டி, நூலடுக்கில் அடுக்கி, வாசகர் தரமுணர்ந்து தேவையுணர்ந்து விருந் துறவுப் பான்மையில் பணிபுரிய வேண்டும்.

### 39 ஐந்து காலங்கள்

இத்தகு முயற்சி நமது இந்திய நூலக இயக்க வரலாற் றில் எப்படி நடந்துள்ளது என்பதை எளிதாக உணர்ந்து, முழுமை யாகப் புரிந்து கொள்ள இந்திய வரலாற்றைக் கால முறையில் 1 சங்க காலம்; 2 சமய காலம்; 3 இசுலாமியர் காலம்; 4 ஆங்கி லேயர் காலம்; 5 சுதந்திர காலம்; என்று ஐந்து பெரும் பகுதி களாகப் பிரித்துப் பார்க்கலாம்.

# 4 சங்க காலம்

## 41 எழுதாக்கிளவி

வாழ்வு தொடங்கியபோது, எல்லாம் வாய் மொழியாகவே இருந்தன. இதையே தமிழில் எழுதாக்கிளவி என்கிறோம்.

## 42 முதலாம் சங்கம்

முதல் சங்கம் கடற்கோளுக்கு முன் பரந்திருந்த நிலப்பகுதியில்–குமரிக்குத் தென்பால் இருந்த தென்மதுரையில்—திகழ்ந்தது. இக்காலப் பரிபாடல், முதுநாரை, முதுகுருகு, அகத்தியம் முதலிய நூல்கள் கடல்கோளால் மறைந்து போயின.

## 43 இரண்டாம் சங்கம்

இரண்டாம் சங்கம் கபாட புரத்திலிருந்து தமிழாய்ந்தது. கலி, முருகு, வெண்டாளி, வியாழமாலை முதலியன இக்காலத்தவையாகும். அகத்தியமும் தொல்காப்பியமும் சிறப்பானவை.

## 44 மூன்றாம் சங்கம்

மூன்றாம் சங்கம் உத்தர மதுரையில் 2000 ஆண்டுகளுக்கு முன் இருந்தது. தொல்காப்பியம், எட்டுத் தொகை, பத்துப் பாட்டு, பதினெண் கீழ்க் கணக்கு முதலியன இக்காலத்தன.

## 45 தொல்காப்பியம்

காலத்தால் முந்திய தொல்காப்பியத்தில் நூல் பற்றிய விளக்கம் (1335), நூல் வகை (1336), நூல் அமைப்பு (1590—1610) முதலியன பற்றி வருவது ஆச்சரியப்படத் தக்கதாகும். இவ்வளவெல்லாம் நூல் பற்றி வரும் காலத்தில் நூலகம் இல்லாமல் இருந்திருக்க முடியாது.

## 46 எட்டுத் தொகை

எட்டுத் தொகையில் ஏராளமான இடங்களில் நூல் பற்றிய குறிப்புகள் கிடைக்கின்றன. சான்றுக்குச் சில:

ஆறு உணர்ந்த ஒருமுது நூல்

(புறநானூறு 166;4),

பயன்தெரி பனுவல் பைதீர் பாண

(நற்றிணை 167:6),

நுணங்கு நுண் பனுவல் புலவன்

(அகநானூறு 345:6).

## 47 பத்துப்பாட்டு

பத்துப் பாட்டில் பல இடங்களில் நூல் பற்றிய குறிப்புகள் காண்கிறோம். சான்றுக்குச் சில:

மாலை மார்ப நூலறி புலவ (திருமுருகு. 261),
நூலோர் புகழ்ந்த மாட்சி (பெரும்பாண் 487),
நூல்நெறி மரபு (சிறுபாணாற்றுப்படை 230).

## 48 பதினெண்கீழ்க்கணக்கு

''புத்தகமே சாலத் தொகுத்தும் பொருள்தெரியார்
உய்த்தகம் எல்லாம் நிறைப்பினும்—மற்றவற்றைப்
போற்றும் புலவரும் வேறே; பொருள்தெரிந்து
தேற்றும் புலவரும் வேறு''

(நாலடியார், 318)

என்ற நாலடியார் பாடல், நூலகம் இருந்து, வாசகர் வேண்டிய கருத்தைக் காணமுடியாது—நூலகர் குறிப்புதவி சரியாகக் கொடுக்காத காரணத்தால்—மனம் நொந்த நிலையில் பாடிய செய்யுள் என்றால் உயர்வு நவிற்சியாகாது.

## 49 நூலக நிலை

அன்றைய பகுப்பு (Classification), தொல்காப்பியர் பகுப்பு—நூல்களை 'திணை, கருப்பொருள், உரிப்பொருள், நிலம், காலம்' முதலிய அடிப்படையில் அமைந்த பகுப்பு—இன்றைய டாக்டர் அரங்கநாதன் 'ஆளுமை, பொருண்மை, சக்தி, நிலம், காலம்' என்ற அடிப்படையில் அமைந்த பகுப்புக்கு முன்னோடியாக அமைந்துள்ளது ஆச்சரியமாயுள்ளது.

# 5 சமய காலம்

## 51 சமயத் தோற்றம்

மனிதன் இயற்கையின் அதிசயங்கள் ஏராளமாய் நடந்து கொண்டு இருப்பதைக் கண்டான். அவற்றுக்குக் காரண காரியத் தொடர்புகள் புரிந்து கொள்ள முடியாதபோது தன்னிலும் அதிக சக்தி உள்ள ஏதோ ஒன்று இயங்குவதாக நினைத்தான். இயற்கை நிகழ்வுகளை வழிபடத் தொடங்கினான். சமயம் பிறந்தது.

## 52 சமய வளர்ச்சி

இம்முறையில் படிப்படியாக இயற்கைப் பொருள் ஆவி, போலிப் பொருள், தெய்வம், தனித் தெய்வம், பலதெய்வம், ஒரு தெய்வம், ஒரே தெய்வ வணக்கம் என்று, மனிதன் முன்னேறினான். இம்முயற்சிக்குத் துணையாகப் பல நூல்கள் எழுந்தன. அவற்றைப் பாதுகாக்க நூலகங்கள் பிறந்தன. சான்றுக்குச் சில.

## 53 இந்து சமயம்

இந்து சமயச் சார்பாக எழுந்த நூல்கள் சுருதிகள்' சுமிருதிகள், இதிகாசங்கள், புராணங்கள், ஆகமங்கள், தரிசனங்கள் என்று பொருள் அடிப்படையில் ஆறு பெரும்பிரிவுகளாகக் கருதப்படுகின்றன. இக்கால நூலகங்கள் பற்றிய திட்டவட்ட மான குறிப்புகள் கிடைக்கவில்லை. ஆனால் திட்டமிட்டு உரு வாக்கிய நூல்கள் பரவ, திட்டமிட்ட அமைப்பு—நூலக அமைப்பு —இருந்திருக்கவேண்டும் என நம்பலாம்.

## 54 சமண சமயம்

நூலக இயக்க வளர்ச்சியில் சமணம் முதலிடம் பெறுகிறது. இ. மு. ஐந்தாம் நூற்றாண்டில் ஏற்பட்ட பஞ்சத்தால் நடமாடும் நூலகங்களாயிருந்த துறவிகள் மடிந்தனர். அவர்கள் வளர்த்துவந்த கருத்துகளும் மறைந்தன. இதைப் புதுப்பிக்கும் வகை புத்தக ஆரோகணம்—திரும்ப எழுதித் தொகுக்கும் முயற்சி—தொடங்கியது. இவற்றைப் போற்றிப் புரக்க ஞான

பூசை-சரசுவதி பூசை-நடந்தேறின. கிரந்த தானங்கள் நடந்தன சமணத் துறவிகள் நூலகர்களாகச் செயல் பட்டனர்.

இந்த நூல்களுக்கு, சமண அடிப்படைக் கருத்துகளான 'உயிர், பொருண்மை, இயக்க ஊடகம்—அமைதி ஊடகம், இடம், காலம்' என்ற ஐந்து அடி வகைப் பகுப்பு இன்றைய அரங்க நாதனின் பகுப்பு முறைக்கு ஒத்திருப்பது வியக்கத் தக்கதாகும்.

## 55 பௌத்த சமயம்

பௌத்த சமயம் நூலக இயக்கத்திற்கு நல்லாதரவு நல்கி யுள்ளது.

மணிமேகலையில் வரும் ஆபுத்திரன் அடைக்கலம் புகுந்த செழுங்கலை நியமம்—மதுரையில் இருந்த செழுங்கலை நியமம் —என்ற சொல் நூலகத்தைக் குறிப்பிடுவதாகும்.

ஆந்திரப் பிரதேச குண்டூர் மாவட்டத்தில் உள்ள நாகார்ச் சுனம் என்ற இடத்தில் அமைந்திருந்த பருவத விகாரையின் ஐந்தாவது மாடியில் புறா வடிவத்தில் அமைத்திருந்த 100 அறை களைக் கொண்ட நூலகம் இருந்தது என்கிறது பாகியான் குறிப்பு.

கனிஷ்கரின் (கி.பி.78–123) தலைநகரான புருசபுரம், முதலாம் குமார குப்தர் (கி.பி. 414–455) நிறுவிய நளாந்தா கல்வி நிலையம், விக்கிரம சீலம், ஓதாந்தபுரி, சோமபுரி, சகதளம், கனேரி, வல்லபி, பாடலிபுரம், தம்லக், காஞ்சிபுரம் முதலிய இடங்களில் பௌத்தப் பள்ளிகளின் ஒரு பகுதியாகப் பெரும் நூலகங்கள் திகழ்ந்திருந்தன எனச் சீன யாத்திரிகர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

## 56 வைணவச் சமயம்

வைணவ நூல்களில் சிறப்பான ஒன்று பௌஷ்கர சம்ஹிதை. இது நாராயணனும் பிரம்மாவும் உரையாடும் முறை யில் அமைக்கப்பட்டுள்ளது. இதில் ஞானப்பிரதிட்டை—அறிவு அமைப்பு—என்றபகுதி 21 சூத்திரங்கள் கொண்டது.

இதில் நூலக அமைப்பு, நூல்கள் சேர்ப்பு, நூல்கள் காப்பு, நூல் போற்றல், நூல் பயன் பற்றி விதந்தோதப்படுகின்றன. இம்முறையில் சீரங்கம், காஞ்சிபுரம் முதலிய இடங்களில் நூலகங்கள் அமைந்திருந்தன என்கின்றன கல்வெட்டுக் குறிப்புகள்.

## 57 சைவ சமயம்

சைவ சமய ஆச்சாரியார்களிலே குறிப்பிடத்தக்கவரான சங்கராச்சாரியார் (கி.பி.788–820) வாழ்ந்த மடத்தில் ஒரு நூலகம் இருந்திருக்கிறது.

சிதம்பரம் கோயிலின் பின்புறத்தில் இருந்த தேவார ஏடுகள் மீட்கப்பட்டதை மிகத் தெளிவாக விளக்குகிறது உமாபதி சிவம் (கி.பி. 942-1012) எழுதிய திருமுறை கண்ட புராணம்.

கழுமலம், உசாத்தானம், வீழிமிழலை, காறாயில், இடைவாய், திருப்பாலைவனம் முதலிய ஊர் கோயில்களில் படிப்பு இடங்கள்—திருக்கைக்கோட்டி மண்டபம் அல்லது தருக்க மண்டபம் அல்லது பிரசங்க மண்டபம்—இருந்திருக்கின்றன.

திருப்பூந்துருத்தி, திருநாகேசுவரம், ஒற்றியூர், வாலீசுரம், செந்தலை, திருக்கோட்டியூர் முதலிய ஊர்க் கோயில்களில் முறையே இராசராச விசயம், சிவதருமம், சோமசித்தாந்தம், திருஞானம், பாரதம், பிரபாகரம் முதலிய நூல்கள் படித்துக் காட்டப்பட்டன என்கின்றன கல்வெட்டுகள்.

## 58 கல்வெட்டில் நூலகங்கள்

சேரன்மாதேவி, சீரங்கம், சிதம்பரம், காஞ்சிபுரம், சிருங்கேரி, நகாய் முதலிய இடங்களில் கிடைத்த கோயில் கல்வெட்டுகள் இவ்விடங்களிலே நூலகங்கள் செயல்பட்ட செய்திகளைச் சிறப்பாகச் செப்புகின்றன.

## 59 நூலக நிலை

அன்பை வளர்க்கத் தோன்றிய சமயங்கள் ஆணவத்தின் காரணமாக மோதத் தொடங்கியபோது அனல் வாதம் புனல் வாதம் என்ற பெயரிலே நூல்கள் பாழாக்கப்பட்டன.

அறியாமையின் காரணமாக ஆடிப்பெருக்கில் ஆயிரக்கணக்கான ஏடுகள் அழித்தொழிக்கப்பட்டன.

யாத்திரிகர்கள் என்ற பெயரில் வெளிநாட்டிலிருந்து வந்தவர்கள்—பாகியான், யுவான்சுவாங், ஈத்சிங் போன்றவர்கள்—புனித நூல்களை எடுத்துச் செல்ல அனுமதித்துவிட்டோம்.

ஓலைச் சுவடிகள் சரியாகக் கவனிக்கப்படாதபோது சிதல் என்றும் செல் என்றும் பெயர் பெற்ற கரையான்களால் பல்லாயிரஞ் சுவடிகள் பாழடிக்கப்பட்டன.

# 6 இசுலாமியர் காலம்

## 61 இசுலாமியர் வருகை

இசுலாமிய நெறியினர் அரேபியாவிலிருந்து கோரி முகம்மது முயற்சியால் கி. பி. 1192–ல் தில்லியில் காலூன்றினர்.

## 62 அடிமை வம்சம்

அடிமை வம்சத்தில் சிறந்தவர்களான பால்பன் (கி.பி. 1266—1286), பால்பன் மகன் முகம்மது புத்ரான்கான் முதலியோர் தனித் தனியாக நல்ல நூலகங்கள் வைத்திருந்தனர்.

## 63 கில்ஜி வம்சம்

கி. பி. 1290ல் கில்ஜி வம்சத்தைத் தொடங்கிய ஜலாலுதீன் கில்ஜி நல்ல நூலகம் அமைத்திருந்தார். இந்த நூலகத்தில்தான் கவிஞரான அமீர்குஸ்ரூ நூலகராயிருந்து பெருமை பெற்றிருக் கிறார்.

## 64 துக்ளக் வம்சம்

துக்ளக் வம்சத்தின் முனைப்பாளரான முகமது பின் துக்ளக் நல்ல கல்வியாளர்; சிந்தனையாளர்; எழுத்தாளர். ஏராளமாக நூல்களைத் தொகுத்து நூலகம் வைத்திருந்தார்.

## 65 லோடி வம்சம்

சிறப்பாக இப்ராகிம் லோடியின் அரசவையர் காஜிகான் தில்லிக் கோட்டையில் ஒரு நல்ல நூலகம் வைத்திருந்தார்.

## 66 முகலாய வம்சம்

முகலாய வம்சத்தைத் தொடங்கிய பாபர் பன்மொழி வல்லுநர். சொந்தத்தில் தனக்கு ஒரு நூலகமும், மகள் குல்பதான் பீகத்திற்கு ஒரு நூலகமும் வைத்திருந்தார்.

பாபரின் மகன் உமாயூன் நூலகப் படிக்கட்டிலிருந்து வழுக்கி விழுந்துதான் காயம் பட்டுக் காலமானார் என்ற குறிப்பு அவர் வைத்திருந்த நூலகத்தைக் குறிக்கிறது.

அக்பர் பல்கலைச் செல்வர். அவர் நூலகத்தைத் தனித்துறை யாக்கிப் பதினாறு வகைப் பணியாளர்களை வைத்திருந்தார்.

அடுத்து வந்த ஜஹாங்கீர், ஷாஜஹான், ஔரங்கசீப் முதலியோர் நூலார்வலர்களாக விளங்கி நூலகத்தை வளர்த் திருக்கின்றனர்.

## 67 பிற நூலகங்கள்

அரசவை நூலகங்களைத் தவிர இலக்னோ, பாட்னா, இராம் பூர், பில்கிராம், ஜான்பூர், சூரத், புரோச், காண்டேஷ், கத்திய வார், அகமதாபாத், ரோகில்கண்டு, பீடார் முதலிய பகுதிகளிலே இருந்த நூலகங்கள் சிறப்புடையனவாகும்.

## 68 அதிசயக் காகிதம்

சீனாவில் ஆதிகாலத்தில் பிறந்த காகிதம் உலகின் பல்வேறு பகுதிகளுக்கும் பயணம் செய்து கொண்டிருந்தது. இசுலாமியர் காலத்தில் இந்தியாவில் சிறப்பிடம் பெற்றது. இது, நூல்கள் விரைவில் உருவாக உதவியது. நூலகங்கள் பெருக உற்சாக மூட்டியது. அரசாதரவு அதற்கு வலுவூட்டியது.

## 69 நூலக நிலை

நூலகம் பலருக்கும் பயன்படத் தொடங்கியது. அரசாதரவு அதற்கு ஊக்கம் தந்தது. அயலார் தொடர்பு, நூல்கள் மொழி மாற்றம் பெற உதவியது. நூலகங்கள் திட்டமிட்டு வளர்க்கப் பட்டன.

# 7 ஆங்கிலேயர் காலம்

## 71 ஆங்கிலேயர் வருகை

கி. பி. 15 ஆம் நூற்றாண்டுக் கடைசியில் மேலை நாட்டுக் காரர்கள் இந்தியாவிற்குக் கடல் வழி கண்டனர் போட்டியில் ஆங்கிலேயர் வென்றனர் வணிகத்திற்கு வந்தவர்கள் ஆட்சியைக் கைப்பற்றத் தொடங்கினர்.

அதில் வெற்றி பெற்றதும் தங்கள் ஓய்வு நேரத்தைப் பய னுள்ளதாக்கிக் கொள்ள நூலகங்களைத் தொடங்கினர். 1784ல் கல்கத்தாவில் வங்க இராயல் ஆசியச் சங்கம் தொடங்கப்பட்டது. கி. பி. 1804ல் பம்பாய் இலக்கியச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. கி. பி. 1818ல் சென்னை இலக்கியச் சங்கம் உருவாகியது. இவை களுடன் செயல்பட்ட நூலகங்கள் வெள்ளையர்களுக்காக மட்டுமே இருந்தன.

## 72 மக்களுக்கு இல்லையா?

தஞ்சாவூரையாண்ட இரண்டாவது சரபோசி மன்னர் கி பி. (1798—1833) அறிஞர்; அறிவு வளர்ச்சியில் ஆர்வம்கொண்டவர். அவர் முயற்சியால் 1820ல் சரசுவதி மகால் நூலகம் உருவாயிற்று.

படித்த இந்தியர்கள் தங்களுக்கான நூலகங்கள் நிறுவ முயன்றனர். குழுவரி (Subscription) நூலகங்கள் தோன்றின. 1830ல் பம்பாய் நூலகம் செயல்படத் தொடங்கியது. இதைத் தொடர்ந்து கல்கத்தா, சென்னை முதலிய இடங்களிலே நூலகங்கள் தோன்றின.

## 73 கட்டணம் இல்லா நூலகம்

நம் படித்த மக்களில் பெரும்பாலோர் கட்டணம் கட்டி —குழுவரி செலுத்திப்—படிக்கும் நிலையில் இல்லை. கட்டணம் இல்லா நூலகம் தேவைப்பட்டது. இதனை மக்கள் தனியாகவும், குழுவாகவும், நேரடியாகவும், மறைமுகமாகவும் ஆளவந்தார் களுக்குத் தெரிவிக்கலாயினர். விளைவு?

1896 டிசம்பர் 5ஆம் நாள் பொதுமக்களுக்கான நூலகம்—கட்டணமில்லா நூலகம் - கன்னிமாரா பொது நூலகம்-சென்னையில் செயல்படத் தொடங்கியது.

1903ல் கல்கத்தாவில் இப்பீரியல் நூலகம்—இன்று அது தேசிய நூலகம் - தொடங்கப்பட்டது.

## 74 கிராம நூலகங்கள்

இப்படித் தோன்றிய நூலகங்கள் நகரப் பகுதிகளிலே தானிருந்தன. அப்படியானால் கிராம மக்களுக்கு இல்லையா என்ற கேள்வி பிறந்தது.

பதில், கெயிக்வாடு உருவிலே பரோடாவிலே பரிண மித்தது. சாதாரணக் குடிமகனாக இருந்து, தத்துப் போன தாலே பரோடா மன்னரான கெயிக்வாடு இதில் முன்னின்றார். நூலகப்பணி முன்னேறியது.

## 75 நூலகச் சங்க முயற்சிகள்

1919 நவம்பர் 14ல் சென்னை கோகலே மண்டபத்தில் முதல் அகில இந்தியப் பொது நூலக மாநாடு நடந்தது. இந்தியப் பொது நூலகச் சங்கம் பிறந்தது. அதன் ஆதரவிலே பல மாநாடுகள் நடந்தன. இதைத் தொடர்ந்து பல்வேறு மாகாணங்களிலே நூலகச் சங்கங்கள் தோன்றின.

## 76 இரட்டை ஆட்சி

1920ல் சென்னை நகராட்சிகள் சட்டத்திலே நூலகங்கள் திறக்கவும் உதவித் தொகை பெறவும் வாய்ப்புகள் கிட்டின.

சென்னை மாகாணத்தில் 1939 சூன் 2 நாளைய 1421 கல்வி ஆணையின் மூலம் பள்ளி நூலகங்கள் பொது மக்கள் பயனுக்குத் திறந்து விடப்பட்டன.

## 77 தனி முயற்சிகள்

1931ல் பொறியர் கனகசபைப் பிள்ளை மன்னார்குடிப் பகுதியில் நடமாடும் நூலகப் பணியைத் தொடங்கினார்.

1932ல் மாவட்ட கல்வி அலுவலர் அப்பர் சுந்தரமுதலியாரும் பள்ளி ஆய்வாளர் வில்வராயும் தென்னாற்காடு மாவட்ட வில்வ

ராய நத்தத்தில் சைக்கிள் நூலக வண்டியில் நூலகப் பணியைத் தொடங்கி நடதினார்.

1936ல் மதுரை மாவட்ட ஆண்டிபட்டிப் பகுதியில் இரட்டை மாட்டுவண்டியில் நூலகப் பணியைத் திருமதி பாலசுப்பிரமணிய ஐயர் தொடங்கி நடத்தினார்.

1939ல் மதுரை மாவட்டக் கழகம் 'ஞானரதம்' என்னும் உந்து நூலகப் பணியைத் தொடங்கியது.

1942 ல் 13,000 முதியோர் கல்வி நூலகங்கள் இருந்தன என்று அறிக்கையொன்று கூறுகிறது.

## 78 அற்புத அச்சு

காலப்போக்கில் மக்கள் பெருக்கம் அதிகமாகியது. சிலருக்கு என்று மட்டுமே என்றிருந்த கல்வி பலருக்கும் பரவ வேண்டிய நிலை பிறந்தது. எனவே கருத்தைப் பரப்ப—நூல் களைப் பெருக்க—அச்சு பிறந்தது.

முதல் தமிழ் நூல்—கார்டிலா—1554-ல் லிசுபனில் அச்சா யிற்று. 1578ல் கொச்சியில் தம்பிரான் வணக்கம் தமிழில் வெளி யிடப்பட்டது. பின்பு பிற மொழிகளிலும் அச்சு நூல்கள் வெளி வரத் தொடங்கின.

## 79 நூலக நிலை

ஆங்கிலேயர் வருகையால் அச்சகத் தொடர்பு, நூலகத் தொடர்பு பெற்றோம். நூலகத்தைப் பலரும் பயன்படுத்தும் முயற்சி உந்துதல் பெற்றது.

# 8 சுதந்திர காலம்

## 81 சூழ்நிலை

1947ல் சுதந்திரம் பெற்றோம். உரிமையோடு கடமையும் வந்தது. இதற்கு நம்மைத் தயார்ப்படுத்திக் கொள்ள பள்ளிக் கல்வி, புறப்பள்ளிக் கல்வி, தொடர்கல்வி, நூலகக் கல்வி தந்து வருகிறோம்.

## 82 நன்முறை முயற்சிகள்

இந்த நூலக முயற்சியில் நன்முறை முயற்சிகள் முதலிடம் பெறுகின்றன. இம்முறையில் 1930ல் வாரணாசியில் நடந்த முதல் ஆசியக் கல்வி மாநாட்டில் நூலக நன்முறைச் சட்டம் (Model Library Act) விவாதிக்கப்பட்டது.

## 83 நூலகச் சட்ட முயற்சிகள்

முதல் சட்ட முயற்சி சென்னையில் 1931ல் தொடங்கியது. தொடர்ந்து பல்வேறு மாநிலங்களிலே முயற்சிகள் நடந்தன.

இதன் விளைவாக 1948ல் சென்னை பொது நூலகச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. 1960ல் ஆந்திரப் பிரதேசப் பொது நூலகச் சட்டம் நிறைவேறியது. 1965ல் மைசூர்ப் பொது நூலகச் சட்டம் வந்தது. 1967ல் மகாராட்டிரப் பொது நூலகச் சட்டம் பிறந்தது. 1979ல் வங்கப் பொது நூலகச் சட்டம் வந்துள்ளது. பிற மாநிலங்களிலே முயற்சிகள் நடக்கின்றன.

## 84 ஆதரவுச் சட்ட முயற்சிகள்

இந்திய அறிவு முயற்சியைக் கட்டுப்படுத்த 1867ல் அச்சகம், நூல் பதிவுச் சட்டம் (Press and Registration of Books Act of 1867) கொண்டு வந்தனர் ஆங்கிலேயர். இதன் விளைவாக இந்தியாவில் வெளியான நூல்கள் பட்டி பெற்றோம்.

இந்திய அறிவு முன்னேற்றத்தைப் பதிவு செய்து வைக்க 1954ல் பொது நூலகங்களுக்கு நூல்கள் ஒப்படைக்கும் சட்டம்

(Delivery of Books [Public Libraries] Act of 1954) நிறைவேறியது.

1957ல் உரிமைப் பதிவுச் சட்டம் (Copy right Act of 1957) வந்தது. இதனால் எழுத்தாளர், பதிப்பாளர் தங்கள் நூல்களுக்கு உரிமைப் பதிவு செய்ய வாய்ப்பு வந்துள்ளது.

## 85 பல்கலைக் கழக முயற்சிகள்

பலருக்கும் உயர்கல்வி தர பல்கலைக் கழகங்கள் தோன்றின. இவை கல்விக்குதவ நூலகங்களை அமைத்தன. இப்படி அமைத்த பல்கலைக் கழக நூலகங்கள் சில 1929 முதல் நூலகப் பயிற்சி, நூலகக் கருத்தரங்குகள் நடத்தி நூலக இயக்கத்திற்கு உதவி வருகின்றன.

## 86 நிறுவன முயற்சிகள்

சென்னை நூலகச் சங்கம், சிறப்பு நூலகச் சங்கம், இந்திய நூலகச் சங்கம் போன்றவை அவ்வப்போது மாநாடுகள், கருத்தரங்குகள் நடத்தி நூலகக் கருத்தைப் பரப்பி வருகின்றன.

## 87 ஆராய்ச்சி முயற்சிகள்

டாக்டர் அரங்கநாதன் 1924 முதல் 1972 வரை நூலகராக, பேராசிரியராக, சிந்தனையாளராக, கொடையாளராக, அறிவுரையாளராக, ஆராய்ச்சியாளராக நூலக ஆராய்ச்சியில் ஒரு புதிய அலையை உலகம் முழுதும் பரப்பியுள்ளார்.

## 88 அரசு முயற்சிகள்

நாட்டைத் திருத்த வந்த நல்ல ஐந்தாண்டுத் திட்டங்களின் ஒரு பகுதியாக நூலக முயற்சிகளும் நடந்தேறி வருகின்றன

## 89 இன்றைய நிலை

நாடெங்கும் வளர்ந்து வரும் கல்வி உணர்வு, நூல் உணர்வு, நூலக உணர்வைத் திட்டமிட்டு வளர்க்க முயற்சிகள் நடந்து வருகின்றன. நாடளாவிய நூலகச் சட்டம் நிறைவேற்றப்பட்டுக் கட்டாய நூலகப் பணி நடக்கவேண்டும்.

# 9 எதிர்காலம்

## 91 எச்சரிக்கை

"எல்லார்க்கும் எல்லாம்என்று இருப்ப தான
இடம் நோக்கி நடக்கின்றது இந்த வையம்
கல்லாரைக் காணும்கால் கல்வி நல்காக்
கசடர்க்குத் தூக்குமரம் அங்கு உண்டாம்!"

என்று எச்சரிக்கை விடுத்தார் பாவேந்தர் பாரதிதாசன் அன்று

## 92 முயற்சிகள்

இதனை உணர்ந்துதான், படிக்கும் வயது அடைந்த குழந்தைகளுக்கு எல்லாம் கட்டாயக் கல்வி தரவேண்டும் என்கிறது இந்திய அரசியல் சாசனம்.

படியாதவர்களுக்கும், படிக்க வாய்ப்பு இல்லாது போனவர்களுக்கும் முதியோர் கல்வி, சமூகக் கல்வி, எழுத்தறிவிப்புக் கல்வி, உழவர் கல்வி, தொழிலாளர் கல்வி என்று பல்வேறு முறைகளில் கல்வி வசதி செய்து தருகிறோம்.

## 93 அடிப்படை ஆவணம்

இதற்கு ஓர் அடிப்படை ஆவணம் (Fifteen Year Library Development Progress for Plan periods 4 to 6 in Library Science 1; 1964;281–308) ஒன்றை மறைந்த நூலக இயல் மேதை டாக்டர் அரங்கநாதன் அவர்கள் தந்துள்ளார். அதன் சுருக்கமாவது:

## 94 பணி முனைகள்

வளர்ந்து வரும் நாட்டிற்குக் கீழ்காணும் விதத்தில் பணி முனைகள் அமைக்கப்படவேண்டும். அவையாவன:

| | | |
|---|---|---|
| 1 | தேசிய மைய நூலகம் | 1 |
| 2 | மாநில மைய நூலகங்கள் | 16 |
| 3 | நகர மைய நூலகங்கள் | 112 |
| 4 | ஊரக மைய நூலகங்கள் | 315 |
| 5 | கிளை நூலகங்கள் | 8,090 |
| 6 | ஊரகப் பணி முனைகள் (12,067 உந்து நூலகங்கள் மூலம்) | 2,41,466 |
| 7 | ஆக மொத்தப் பணி முனைகள் | 2,50,000 |

இதன்படி சற்று ஏறத்தாழ ஒவ்வொரு இரண்டாயிரம் மக்கள் தொகுதிக்கும் ஒரு நூலகப் பணிமுனை (Service Point) வேண்டும்.

## 95 பணியாளர்கள்

மேற்கண்ட பணிமுனைகளை நிர்வகிக்கக் கீழ்கண்ட முறையில் பணியாளர்கள் தேவை. விவரம் இதோ:

| | | |
|---|---|---|
| 1 | நூலகப் பட்டம் பெற்ற தொழிலர்கள் | 88,000 |
| 2 | முதனிலை நூலகப் படிப்புப் படித்த தொழிலர்கள் | 11,000 |
| 3 | எழுத்தர்கள் | 18,000 |
| 4 | தொழில் நுணுக்கர்கள் | 14,000 |
| 5 | உதவுநர்கள் | 1,19,000 |
| 6 | ஆக மொத்தப் பணியாளர்கள் | 2,50,000 |

அதாவது ஒவ்வொரு பணி முனைக்கும் சராசரி ஒரு பணி யாளர் வேண்டும்.

## 96 நிதி ஆதாரம்

எந்த ஒரு வேலைக்கும் நிதிதான் ஆதாரம். இம்முறை யிலே நூலகப் பணிக்கு வேண்டிய தொகையாவது:

| | |
|---|---|
| பணியாளர் சம்பளம் | ரூ. 113 கோடி |
| நூல்கள் முதலியன | ரூ. 113 கோடி |
| ஆக மொத்தம் | ரூ. 226 கோடி |

அடுத்த பதினைந்து ஆண்டுகளில் முழுமை அடையும் நூலகப் பணிக்குத் தேவை ரூ. 226 கோடி. பிற செலவுகளுக்கு ரூ. 133 கோடி வேண்டும்.

அதாவது ஆண்டு ஒன்றிற்கு ரூ. 25 கோடி வேண்டும். எளிதாகத் தலைக்கு ஒரு ரூபாய் நூலகப் பணிக்கு ஒதுக்கீடு செய்து பணியை விரைவுபடுத்தலாம்.

## 97 ஒருங்கிணைப்பு

முன் கூறிய கணக்கு எல்லாம் பொது நூலகத்துறை (Public Library System) கல்வியோடு தொடர்பு கொண்டுள்ள பள்ளி, கல்லூரி, பல்கலைக் கழக நூலக முறைமை (Academic Library System)யோடு ஒருங்கிணைப்பு ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

## 98 சட்டம்

இதற்கு ஒவ்வொரு மாநிலமும் பொது நூலகச் சட்டம் நிறைவேற்ற வேண்டும். இவைகளை ஒருங்கிணைக்க மத்திய அரசு நூலகச் சட்டம் ஒன்றும் நிறைவேற்றப்பட வேண்டும்.

## 99 முயல்வோம்

### 991 அர்ப்பணிப்பு

எனவே அறிவின் முன்னோடிகளாகிய நாம்—நூலகப் பணியாளர்களும் நூலக ஆர்வலர்களும், அரசாங்கமும்—'நூல் உணர்வு பரவ, நூலக உணர்வு பெருக, நூலக இயக்க உணர்வு வளர அயராது உழைப்போம்; ஆர்வத்தோடு உழைப்போம்; ஒன்றாக உழைப்போம்; நன்றாக உழைப்போம்' என்று நூலகப் பணிக்கு நம்மை அர்ப்பணித்துக் கொள்ளவேண்டும்.

### 992 இலட்சியப் பணி

இதையும் ஓர் இலட்சியமாக, ஆர்வமாக, நம்பிக்கையாகக் கொண்டு உழைக்க வேண்டும். அப்போதுதான் ஓர் இலட்சிய நூலகப் பணியை நிறைவேற்ற முடியும். இது எப்படி?

### 993 சங்கநாதம்

காலை மணி 5–50. ஊர்மக்கள் தங்கள் தினசரி வாழ்க்கையைத் தொடங்க முயன்று கொண்டு இருக்கின்றனர்.

வா...ரீ...ர் என்ற நீண்ட அழைப்பு ஒலி—சங்கொலி—கேட்கிறது. தொடர்ந்து

'வாரீர்...நீவீர்...வாரீர்!
நூலகம் வெகு தூரம் இல்லை
வாரீர்...நீவீர்...வாரீர்!

என்ற இசை மிதக்கிறது, ஊரின் மையத்தில் இருந்து.

ஆச்சரியமாய் இருக்கிறதா? நூலகமாவது—இசை பாடி அழைப்பதாவது என்றா? ஐயம் இல்லை; நூலகம்தான் அழைக்கிறது.

**994 கி. பி. 2000**

**9941 நூலக இலட்சியம்**

கி பி 2000ல் அமைய இருக்கும் இலட்சிய நூலகம்—இயந்திர இணைப்புகள் பெற்ற நூலகம்—பணியாற்றப் போகும் ஒத்திகை தான் இப்போது செயல்படத் தொடங்கி உள்ளது. வருகிறீர்களா? வாருங்கள், நூலகம் போகலாம்!

**9942 கடை திறப்பு**

காலை மணி 5.51. நூலகத்து வாயிலில் நூலகப் பணியாளர்கள் சிலர் வந்து நிற்கின்றனர். அனைவரும் ஒன்றாய் வாயிலின் முன்னர் இருக்கும் சிவப்புச் சதுரத்தில் நிற்கின்றனர். ஒருவர் கதவின் சாவித் துவாரத்திலே சாவியை வைத்துத் திருப்புகிறார்; கதவு திறக்க மறுக்கிறது!

ஆம்; மறுக்கத்தான் செய்யும். நூலகப் பணியாளர்கள் குறைந்தது இருபது பேராவது வந்தால்தான் திறக்கும் என்ற நினைவு வரவே சாவியை வைத்திருப்பவர் திரும்பிப் பார்க்கிறார். பத்தொன்பது பணியாளரே இருக்கின்றார். அதோ மேலும் ஒருவர் வந்து சேர்கிறார்.

பளிச்சென ஒரு ஒளி—ஒலி. கதவின் வலது பக்கத்தில் 'கடை திறப்பு' என்ற பகுதியில் இருபது பேரின் படமும் தெரிகிறது. அன்று காலையில் யார் வந்தார் என்பதைத் தானே படம் எடுத்துக் கணக்கிடும் கருவி காட்டிவிட்டுக் கதவு திறக்க உதவுகிறது.

இருபதின்மரும் உள்ளே செல்கின்றனர். அவரவர் பகுதிக்குச் சென்று, வேலையைத் தொடங்குகின்றனர்.

**9943 வாசகர் வருகிறார்**

மணி 6.00. நூலகத்தின் அழைப்பு ஒலி—இசை ஒலி—கேட்ட வாசகர் ஒருவர் வருகிறார்.

'வாசகர் வழி' என்று பொதிந்த பச்சை வண்ண நடைபாதை வழியாக உள்ளே நுழைகிறார்.

அங்கு அமைதியாக சிறு ஒளி-ஒலி. 'வாசகர் பட்டி' என்ற பலகையில் ஒன்று என்ற எண்ணும் வாசகர் உருவமும் தோன்றி மறைகின்றன.

இப்புதிய நூலகத்தில் வாசகர் முகவரி எழுதிக் கையொப்பம் இடவேண்டியது இல்லை. இயந்திரம் வந்தவர்களைக் கணக்கிட்டுப் படமும் எடுத்து விடுகிறது.

**9944 பட்டி அறை**

வாசகர் பட்டி அறை (Catalogue room)ப் பக்கம் நகர்கிறார். பட்டி இழுவையை இழுக்கிறார். என்ன ஆச்சரியம்!

வாசகர் பார்க்க விரும்பிய ஆசிரியரின் நூல் பட்டி மட்டும் அல்ல; பதிவோடு நூலின் வண்ண உருவமும் சின்னஞ்சிறு உருவிலே—ஆனால் தெளிவாகத்—தெரிகிறது.

வாசகர் ஆச்சரியத்தோடு பார்க்கிறார். விரும்பிய நூலை எடுக்க விரைகிறார் அடுக்கு அறைக்கு.

**9945 அடுக்கு அறை**

அடுக்கு அறை (Stack room) யின் உள்ளே நுழைகிறார். அங்கு நூல்கள் பொருள்வாரியாக அடுக்கப்பட்டு உள்ளன.

இங்கு ஒரு ஆச்சரியம்! பதிப்பகத்தில் இருந்து எவ்வித மேலட்டைப் படத்தோடு வெளியாகியதோ அப்படியே காட்சி தருகின்றன. அதே சமயம் அதன் மேல் ஒளி ஊடுருவும் நூலக அட்டை!

பட்டி அறையில் கண்ட நூலின் உருவம் உதவ சட்டென நூலைக் கண்டுபிடித்து எடுக்கிறார். நூலை, எடுத்துப் புரட்டிப்

பார்க்கிறார். மேலும் சில நூல்களைப் புரட்டிப் பார்க்கிறார். கை நிறைந்து விடுகிறது.

வேண்டாத ஒன்றை அடுக்கில் திணிக்கிறார். 'அடுக்கில் வைக்கற்க; அண்மையில் உள்ள மேசையில் வைக்க; தயவு செய்து மேசையில் வைக்க' என்று மென்மையாகக் கேட்கிறது.

வாசகர் தவறு உணர்கிறார். தேவை இல்லாத நூலை மேசை மேல் வைக்கிறார். வேண்டிய நூல்களை மட்டும் எடுத்துக் கொண்டு படிப்பு அறைப் பக்கம் போகிறார்.

## 9946 படிப்பு அறை

படிப்பு அறையில் ஒவ்வொரு வாசகராக வந்து சேர்கிறார்கள். படிப்பு அறை நிறைந்து கொண்டு இருக்கிறது. ஒவ்வொருவரும் படிப்பதில்—படித்துக் குறிப்பு எடுப்பதில்–ஈடுபட்டு இருக்கின்றனர்.

அதோ கிழக்கு மூலையில் ஒரு வாசகர் பக்கங்களைப் புரட்டிக் கொண்டு இருக்கிறார். கொஞ்ச நேரம்தான் கழிந்து இருக்கும். முதல் நாள் இரண்டாம் காட்சி திரைப்படம் பார்த்ததின் விளைவு! கண்கள் சொக்குகின்றன.

பாவம்! ஒரு நிமிடத்தில் அவர் இருக்கை ஒரு அசைவு அசைகிறது. ஆம்! தூக்கத்தைக் கலைக்கிறது, இயந்திரத் தொடர்பு கொண்ட இருக்கை. அவரும்உணர்கிறார். எழுந்து சென்று முகத்தைக் கழுவிக் கொண்டு வருகிறார். படிப்பைத் தொடர்கிறார். பிறகு பருவ இதழ் அறைக்குச் செல்கிறார்.

## 9947 பருவ இதழ் அறை

பருவ இதழ் அறை (Periodicals room)யில் ஏராளமான பருவ இதழ்கள் மொழிவாரியாக, பொருள்வாரியாக அடுக்கப்பட்டு உள்ளன.

கொலு பொம்மைகள் போல படிப்படியாக அடுக்கி—நிறைந்த இதழ்களை, குறைந்த இடத்தில், சிறந்த முறையில் தெரியும்படியாக அடுக்கி, வைக்கப்பட்டுள்ளன வாசகர்கள் பார்வைக்கு வசதியாக.

அதோ ஒரு வாசகர்! புதிது போல தெரிகிறது. மெல்ல மெல்ல அடி எடுத்து உள்ளே வந்து ஒரு பக்கமாக அமர்கிறார். சில இதழ்களைப் புரட்டுகிறார்.

பின் அமைதியாக ஆள் இல்லாத ஒரு மேசைக்குப் போகிறார். கொஞ்ச நேரம் ஆகிறது. அக்கம் பக்கம் பார்க்கிறார். அழகான படம் இருந்த ஒரு சிறிய இதழை எடுத்து இடுப்பினுள் சொருகிக் கொள்கிறார். பாவம் அறியாமை!

இருந்தும் இருந்தும் வாசகர் இப்படி
இழிவாய் நடந்தாரே! பாவம்
இழிவாய் நடந்தாரே!

இருக்கும் இதழை இடுப்பில் ஒளித்து
இழிவாய் நின்றாரே! ஐயோ
இழிவாய் நின்றாரே!

என்று பாடுவதுபோல—ஆனால் பாடாமல்—இடுப்பில் உள்ள இதழில் இருந்து ஒளி—ஒலி பளிச்செனத் தெரிகிறது; கேட்கிறது.

இதன் குறியீடு உணர்ந்த பருவ இதழ் அறையில் பணி யாற்றும் பணியாளர் அவர் அருகில் வருகிறார். இடுப்பைத் தடவிப் பார்க்கிறார். நூலகர் அறைக்கு அழைத்துச் செல்கிறார்.

## 9948 நூலகர் அறை

மறைத்த இதழோடு மனம் வருந்தும் வாசகரையும் பணி யாளரையும் கண்ட நூலகர் நடந்ததைப் புரிந்து கொள்கிறார்.

அவர் பார்வையே வாசகரை உலுக்குகிறது. வாசகர் இதழை மறைத்ததைத் தானே ஒப்புக்கொள்கிறார்; மனம் வருந்து கிறார்; கண்கள் கலங்குகின்றன. மன்னிப்பு வேண்டுகிறார்.

தவறு செய்தவர் தவறை உணரும்போது மன்னிப்பு உண்டு என்பதை உணர்த்தப்படுகிறது நடைமுறையில்.

'வேண்டியதைக் கேட்டபோது கொடுக்கத்தானே இவை எல்லாம் வைத்திருக்கிறோம்; இந்த இதழுக்கு ஒரு படி (Xerox Copy) எடுத்துக் கொடுத்து அனுப்புக' என்கிறார் நூலகர்.

## 9949 கொடுத்து வாங்கும் இடம்

திருந்திய வாசகர் நூல்கள் கொடுத்து வாங்கும் இடம் (Counter) வருகிறார்; நூலகர் சொன்ன செய்தியைச் செப்புகிறார்.

இதற்கு முன்னாலேயே நூலகர் இந்த விவரத்தைக் கொடுத்து வாங்கும் இடத்தில் பணியாற்றுபவருக்குச் சொல்லி விடுகிறார். எனவே இதழைப் பெறுகிறார்.

இதழின் அடிப்பாகத்தில் இருந்த ஒரு சிறு துணுக்கை அகற்றிக் கொள்கிறார். பிறகு வாசகர் கையில் இதழைக் கொடுத்து அனுப்புகிறார்.

வாசகர் நகர்கிறார். அந்த வாசகரையும் இதழ் படியையும் இணைத்துப் படம் ஒன்று பதிவாகிறது வெளிவாயிலிலே.

திருட்டுத்தனமாக எடுத்துப் போனால் ஒலி எழுப்பிக் காட்டும் துணுக்கு (Thief detector)—இதழிலிருந்து அகற்றிய துணுக்கு—வரிசையாக அடுக்கி வைக்கப்படுகிறது எனவே இதன் மூலம் திருட்டுப் போவது தடுக்கப்படுகிறது.

**995 முடியுமா?**

இப்படி எல்லாம் நூலகம் திறப்பது முதல், நூலகத்தின் பல் வேறு பகுதிகள் இயந்திர உதவியால் நடக்குமா, நடக்க முடியுமா, என்ற கேள்வி இந்தக் கட்டுரையை—கதையை—கருத்தைப்—படிப்பவர் ஒவ்வொருவர் மனதிலும் எழுவது இயற்கை! எனவே முடியுமா என்ற கேள்வி நியாயமானது தான்.

**996 கனவு**

இப்படி ஒரு கனவு. 1955ல் நூலகர் ஒருவருக்கு எழுந்தது. எழுந்த சூழ்நிலை என்ன?

பெரியதொரு நூலகத்தில்—அறிஞர்கள் படிக்கும் நூலகத்தில்—கணக்கெடுப்பு நடந்து முடிந்தது.

பல நூல்கள் காணப்படவில்லை. காரணங்கள் ஆராயப் பட்டன. சமூகத்தில் காணப்படும் குறைபாடுகள்—நடைமுறைகள்—நூலகத்திலும் பிரதிபலிப்பதைக் காண முடிந்தது. இதற்கு மாற்று வழி என்ன?

இயந்திர உதவியை நாடும் எண்ணம் எழுந்தது. கனவு விரிந்தது; கனிந்தது. கனவு நனவு ஆகுமா?

997 நனவு

அறிவியல் கனவுகள் பல நனவுகள் ஆகி வருவதைக் காண்கிறோம் இன்று நாம்.

அம்புலியை அழைத்த காலம் மாறிப் போயிற்று; அம்புலிக்கே போய் வந்துவிட்டான் மனிதன்!

இம்முறையிலே இன்று மேனாடுகளில் பல்வேறு இயந்திர உதவிகள் நூலகங்களில் பயன்படுத்தப்படுகின்றன. நூல்கள் — பருவ இதழ்கள்—மைக்ரோ உருவில் பாதுகாக்கப்படுகின்றன. பருவ இதழ்கள் வாமன உருவில்—நுண் உருவில் – படச்சுருள் உருவில் காணக் கிடைக்கின்றன. வாசகர்களை எண்ணுவது, படம் எடுப்பது முதலியன நடக்கின்றன. நூல்களைக் கொடுப்பதும் திரும்பப் பெறுவதும் நிழல்பட முறையில் பதிவு செய்யப் படுகின்றன. நூல் திருடு போவதைத் தடுக்கும் முறைகள் நடைமுறையில் வந்துவிட்டன.

கால்பட்டால் கதவு திறக்கிறது அண்ணா சாலையில் உள்ள ஆந்திரா பாங்க்!

998 நடத்துவது எப்படி?

இதைச் செயல் முறையில் நடத்துவது எப்படி? முயன்றால் முடியாதது ஒன்று இல்லை.

முயற்சி செய்; முயற்சி செய்;
முடியும் மட்டும் முயற்சிசெய்;
அயற்சியின்றி முயற்சிசெய்;
அடையும் மட்டும் முயற்சிசெய்!

என்று முயற்சி செய்யவேண்டும்.

நமது நாட்டில் முழுமையான நூலகப்பணி நடக்க 226 கோடி தேவைப்படும் என்று கணக்கிட்டார் நூலகவியல் முன்னோடி டாக்டர் அரங்கநாதன் சில ஆண்டுகளுக்கு முன்னர்.

இதில் ஒரு பத்துக் கோடியை ஒதுக்கினால்—ஒரு கோடியை ஒதுக்கினால்—முன்னோடியாகச் சில காரியங்களை நடத்தலாம். தேவை எல்லாம் மனம்தான்! மனம் கொண்ட ஆள்தான்! ஆளுக்கு உதவும் ஆதரவுதான்!

**999 பாடுபடுவோம்**

**'ஊருக்கு ஒரு நூலகம்; அயராது உழைக்கும் நூலகர், ஆளுக்கு ஒரு நூல்—அதுவும் நான்குபேர்—தாய், தந்தை, மகன், மகள் ஆகிய நால்வரும் நடுவீட்டில் சேர்ந்து அமர்ந்து நாணம் கொள்ளாமல் படிக்கக்கூடிய நல்ல நூல்; அடைய முடியாதது உண்டா என்ற ஆர்வம்—இலட்சியம்—கொண்டு முயல்வோமானால் — பாடுபடுவோமானால், மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை சொல்லியது போல—அறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி சொல்லியது போல—இப்படை தோற்கின் எப்படை வெல்லும்?**

எனவே

தண் எனும் நீரும்
தவழ்ந்து வரும் நற்காற்றும்,
விண் இழியும் ஒளியும்
வித்தியா சம்ஏது மின்றி
மண் உலக மக்களுக்கு
மகிழ்ச்சி அளிப்பது போல்
கண்ஒத்து அறிவினை நாம்
காணிக்கை யாக்கி டுவோம்!

இப்பணி யைச்செய் வதற்கு
இவ் வுலக சாதனத்தில்
முப்போதும் பயன் தரவே
முறுவலுடன் கணந் தோறும்
ஒப்பேதும் உரைக்க வொணா
உயரிய நன்னிலை யினிலே
எப்போதும் நிற்பது எது?
எழுச்சி கொள் நூலகம்தான்!

ஒன்றாக நம் நூலகத்தில்
ஒருகை விரல் போல
நன்றாக உழைத்தி டுவோம்;
நல்லவராய்த் திகழ்ந்தி டுவோம்;
முன்னேற்றம் கண்டி டுவோம்;
மூந்துநிலை பெற்றி டுவோம்;
மின்னாகப் பாய்ந்தி டுவோம்;
மிகப்பெருமை கூட்டி டுவோம்!

# நூலகப் பொங்கல்

எல்லையிலா அறிவுவயல் உழுதறிஞர் நித்தம்
எண்ணமெனும் கால்வழியே கற்பனைநீர் பாய்ச்சி
ஒல்லையிலே நற்கருத்து விதைமுளைக்க நாளும்
ஓயாமல் உழைத்தெழுத்து ஓவியநற் பயிரில்
பல்கலையாங் காவியங்கள் பற்பலவும் விளையப்
பாடுபட்ட அறிவுழவர் பக்குவமாய்ச் சேர்த்து
தொல்லைதரும் அறியாமை மிடிநீங்க எவர்க்கும்
சுவையறிவுப் பொங்கல்தரும் நூல்களையே காணீர்!

என்றென்றும் திகட்டாத இனியநறும் பொங்கல்!
ஏழைக்கும் செல்வர்க்கும் இணையான பொங்கல்!
ஒன்றொன்றும் அறிவுத்தேன் உகுத்துச்செய் பொங்கல்!
உண்ணஉண்ணத் திகட்டாது உணர்வூட்டும் பொங்கல்!
சென்றென்றும் அருந்திடலாம் செழும்பொங்கல்! ஆமாம்;
திருநாட்டில் நூலகமாம் திருவீட்டில் நித்தம்
இன்றேஇத் தைநாளில் எல்லோரும் சேர்ந்து
இனியதமிழ்ப் பொங்கலுண்போம் எல்லோரும் வாரீர்!

அச்சிட்டோர் : மூவேந்தர் அச்சகம், சென்னை-14.